

அமரர்

# திருமதி சிவகுரு தங்கம்பிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்படும்


# தங்க மலர்

25.03.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர்
# திருமதி சிவகுரு தங்கம்பிள்ளை
அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்படும்

# தங்கமலர்

**25.03.2008**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்



எங்கள் குடும்பத்தின் ஒளித்தீபமாய்

எல்லோருக்கும் ஒளியைக் கொடுத்து

எங்களுக்கு அன்போடும் பண்போடும்

பாசத்துடனும் உணவூட்டி

நல்வழி காட்டிய, கல்வியறிவூட்டிய


எங்கள் அன்பு அம்மாவிற்கு

இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

**- குடும்பத்தினர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அமரர்
திருமதி சிவகுரு தங்கம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தின்போது

திரு-திருமதி

சிவகுரு – தங்கம்பிள்ளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்வு
01.05.1935

உதிர்வு
24.02.2008

அமரர்

# திருமதி சிவகுரு தங்கம்பிள்ளை

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டுநல் சர்வசித்து அணி மாசி பன்னிரண்டு
பூண்டதிரு அபரபக்க திருதியையில் - ஈண்டு புகழ்
தையிட்டிசேர் தங்கம்பிள்ளை தன் தவப்பயனால்
ஐயனடி சேர்ந்தாள் அற்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர் திருமதி சிவகுரு தங்கம்பிள்ளை

அவர்களின்

# வாழ்க்கைப் பாதையில்...

இலங்கைத் திருநாட்டின் காங்கேசன்துறைப் பட்டினத்தின் விவசாய பூமியாகிய தையிட்டி எனும் கிராமத்தில் கந்தப்பிள்ளை தெய்வானை ஆகியோருக்கு கடைசி மகளாக ஆயிரத்து தொளாயிரத்து முப்பந்தைந்தாம் ஆண்டு வைகாசி மாதம் 1ம் திகதி (1935.05.01) இப்புவிதனில் அவதரித்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை காங்கேசன்துறையில் கற்று பின் தனது 10வது வயதில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடிக்கு தமது தமையன்மார்களுடன் வருகைதந்து, யாழ். இளையதம்பி வித்தியாலயத்தில் தனது கல்வியைத் தொடர்ந்து கற்றார்.

பின் தனது 23வது வயதில் தையிட்டியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் நான்காவது மகனான, சேர் பொன் இராமநாதன் வீதியில் சிவகுரு ஸ்ரோர்ஸ் எனும் வியாபார நிலையத்தை நடாத்தி வந்த சிவகுரு என்பவரைத் திருமணம் செய்து சிறப்பாக வாழ்ந்து வந்தார்.

இல்லறத்தின் பயனாக சாந்தகுமார், தேவகுமார், ஜெயகுமார், ஜெயந்தி, ஜெயமதி ஆகிய ஐவரையும் பிள்ளைகளாகப் பெற்றெடுத்து சிறப்போடு வாழ்ந்து வந்தார்.

மூத்தமகனான சாந்தகுமார் (தொழினுட்பவியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), கொக்குவில் மேற்கைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த விஜயலட்சுமி (ஆசிரியர் - ஆனைக்கோட்டை R.C.T.M) ஐ திருமணம் செய்ததன் பயனாக ஜிதுர்சனன், ஜிருசிகன், ஜிருசிகா, ஜிதுர்சனா ஆகியோர்களை பிள்ளை களாகப் பெற்று மகிழ்ந்தனர். இரண்டாவது மகனான தேவகுமார் (ஆசிரியர் - யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) தையிட்டியைச் சேர்ந்த சரோஜாதேவி (ஆசிரியர் - யா/ இராமநாதன் கல்லூரி)ஐ திருமணம் செய்தார். மூன்றாவது மகனான ஜெயகுமார் (உரிமையாளர் - சிவகுரு ஸ்ரோர்ஸ்) பளையைச் சேர்ந்த யோகேஸ்வரியைத் திருமணம் செய்தார். மூத்தமகளான ஜெயந்தி தையிட்டி யைச் சேர்ந்த தருமராசாவைத் திருமணஞ் செய்ததன் பயனாக பிரவிந்தன், கீர்த்திகன், செந்துமி ஆகியோரைப் பிள்ளை களாகப் பெற்று மகிழ்ந்தனர்.

இவ்வாறு சிறப்பாக வாழ்ந்து வரும்போது 2007.01.01ம் திகதியன்று இவரது கணவன் இறைவனடி சேர்ந்தார். இந்த சோகம் ஆறுவதற்கு முன்பே இவரது உடல்நிலையும் பாதிக்கப்பட்டது. சுவாசப்பையில் ஏற்பட்ட நோயின் காரணமாக 2008.02.23ம் திகதி யாழ். போதனா வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக் கப்பட்ட போதிலும் 2008.02.24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்கடஹர சதுர்த்தியன்று காலை 9.30 மணியளவில் அம்பிகையின் காலடியில் இணைந்துகொண்டார். எங்கள் பாசமிகு அம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல அம்பிகையைப் பிரார்த்திப்போமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாமாலை

## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க – வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சத் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும் நீ
இறைவன்நீ ஏறார்ந்த செல்வன் நீயே.

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ
இதற்கு நாயகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆலமே அமுதமாக உண்டு வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண்டர்க்காய்ச் சாய்த்தனை - அடியேற்கின்று
ஞாலம் நின் புகழேயாக வேண்டும் நான் மறைகள் ஏத்தும்
சீலமே ஆலவாயிற் சிவபெருமானே என்றார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

**தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி**
**அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூ ர் எங்கோன்**
**திருவாசகம் என்னுந் தேன்.**

*நமச்சிவாய வாழ்க! நாதன்றாள் வாழ்க!*
*இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!*
*கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!*
*ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!*
*ஏக னனேகன் இறைவன் அடிவாழ்க!*
*வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க!*
*பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!*
*புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!*
*கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!*
*சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!*
*ஈச னடிபோற்றி எந்தை அடிபோற்றி*
*தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி*
*நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள் தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்ப து வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்கள்

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர் திரு. சி. தேவகுமார் அவர்களின்
பாசமிகு அன்னை

## திருமதி சிவகுரு தங்கம்பிள்ளை

அமரத்துவமடைந்த செய்தி அறிந்து துயருற்றோம். அன்னாரது ஆத்ம சாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவர்தம் குடும்ப உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக விவசாயபீட இரசாயனவியல் துறையில்
பணிபுரியும் **திரு. சி. சாந்தகுமார்** அவர்களின்
அன்புத் தாயார்

## திருமதி சிவகுரு தங்கம்பிள்ளை

அவர்கள் 24.02.2008 அன்று காலமானதை அறிந்து மிகவும் மனவருத்தமடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். பல்கலைக் கழகம்

**விவசாயபீட நலன்புரிச் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

**திருமதி ச. தேவகுமார்** அவர்களின்

மாமியாரான

## திருமதி சிவகுரு தங்கம்பிள்ளை

காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**அதிபர், ஆசிரியர், கல்விசாரா**
**ஊழியர்கள்**
*யா/ இராமநாதன் கல்லூரி,*
*சுன்னாகம்.*

---

# மலர் வளையங்கள் அணிவித்தோர்


**யா/ கோண்டாவில்**
**இந்து மகாவித்தியாலயம்**
**கோண்டாவில் மேற்கு.**

**யா / இராமநாதன் கல்லூரி**
**சுன்னாகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அமரர் சிவகுரு தங்கம்பிள்ளை அவர்கள்
# வம்ச விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கிறோம்



எமது அன்புத் தெய்வமான பாசமிகு
எமது தாயார் சிவபதமடைந்த செய்தியைக் கேட்டு
எமது இல்லத்திற்கு வருகை தந்து
இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும்
கடிதங்கள் மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர்
வளையங்கள் அணிவித்தவர்களுக்கும்
மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும்
சகல விதத்திலும் உதவிகள் செய்த உத்தமர்களுக்கும்,
அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளில்
கலந்து கொண்டோருக்கும்,
இம்மலரை வெளியிட உதவியோருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

626/7, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

**சாந்தி அச்சகம்** ஓவ்செற் பிரின்ட்
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
போன் : 222 2821



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.


எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.

மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

இந்த மாற்றம் உலக நியதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தி அச்சகம் நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம். T.P 222 2821